BS
12/01/23

பெறப்பட்டது
12 JAN 2023
வேலூர் - 632 009

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை –6.**

**ந.க.எண்.019528/எம்/இ1/2022, நாள்.10.01.2023** 207

**பொருள்:–** பள்ளிக் கல்வி - கல்விசாரா செயல்பாடுகள் – 2022–2023 ஆம் கல்வியாண்டில் சிறார் திரைப்படங்கள் திரையிடுதல் - பின்பற்ற வேண்டிய கூடுதல் வழிமுறைகள் – முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து.

**பார்வை:–** தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க.எண்.019528/எம்/இ1/2022 நாள் 22.08.2022.

*******

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி, ஒவ்வொரு மாதமும் அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் இம்மாதம் ஜனவரி 11 முதல் 13 வரை 'மார்டன் டைம்ஸ்' திரைப்படம் திரையிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தின் சுருக்கம் இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது குறித்த கட்டுரை, தேன்சிட்டு இதழிலும் வெளிவந்துள்ளது.

பார்வையில் காணும் சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட அறிவுரைகளுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளையும் பின்பற்றிடக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒவ்வொரு பள்ளியிலும் திரைப்படத் திரையிடல் நடவடிக்கைக்காக ஒரு ஆசிரியருக்கு பொறுப்பு அளிக்க வேண்டும். தலைமை ஆசிரியருடன் இணைந்து பொறுப்பு ஆசிரியரும் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்.

**திரையிடலுக்கு முன்:**

- இணைப்பு வாயிலாக பள்ளிகளுக்கு அனுப்பப்பட்ட திரைப்படத்தை மட்டும் திரையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
- பதிவிறக்கம் செய்வதில் சிக்கல் இருந்தால் பள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ள ஆசிரியர் பயிற்றுநர் அல்லது மாவட்ட ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளவும்.
- பொறுப்பு ஆசிரியர் திரைப்படம் திரையிடும் நாளுக்கு முன் படத்தைப் பார்க்க வேண்டும் கதை சுருக்கத்தைப் படித்து, படத்தின் கதைக்களத்தை வெளிப்படுத்தாமல் குழந்தைகளுக்கு அடிப்படை பின்னணியைக் கொடுக்க வேண்டும்.
- வகுப்பறையைத் திரையிடலுக்கு தயார் செய்ய வேண்டும். வகுப்பறையில் வெளிப்புற ஒளி குறைவாக இருப்பதையும் போதுமான காற்று வசதி உள்ளதையும் உறுதி செய்திடல் வேண்டும்.
- மின் இணைப்புகள் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்திடல் வேண்டும்.
- நிகழ்ச்சியின் போது வகுப்பறையில் போதுமான குடிநீர் வசதி இருப்பதை உறுதி செய்திடல் வேண்டும்.
- வகுப்பறையில் திரைப்படக்காட்டி (Projector) இல்லாத பள்ளிகளில், பள்ளிமேலாண்மைக் குழுக்கள் (SMC) வாயிலாக வாடகைக்கு பெற்று திரையிடவேண்டும்.
- திரையிடலுக்கு ஒரு சுவரைப் பயன்படுத்தினால் அது தெளிவான வெள்ளை சுவராக இருக்க வேண்டும்.

**திரைப்படத்தைப் பதிவிறக்கம் செய்தல்:**

- கொடுக்கப்பட்டுள்ள லிங்கை கிளிக் செய்யவும்
- https://drive.google.com/file/d/1ZRLX_S-u1ssWOi18LoPw4Dn0b8zV0071/view?usp=sharing
- https://www.dropbox.com/s/twtk6bmwz7cnptu/Modern.Times.1936.Remastered.1080P.Bluray.X264-Sadpanda%281%29.m4v?dl=0

- இணைப்பைக் கிளிக் செய்தவுடன், அது பதிவிறக்கமாகும் வரை காத்திருக்கவும், அதிவேக இணையம் என்றால் 7–10 நிமிடங்கள் அல்லது குறைந்த வேக இணைய வசதியாக இருந்தால் 15–20 நிமிடங்கள் வரை ஆகும்.

<u>**திரையிடலுக்கு பின்:**</u>

- பார்வையில் காணும் சுற்றறிக்கையில் பகிரப்பட்டுள்ள கேள்விளைத் (For Spotlight) தயாராக வைத்திருக்க வேண்டும். திரைப்படம் மற்றும் அதன் கதைக்களம், மையக் கதாபாத்திரங்கள், துணை நடிகர்கள், கேமரா விளக்குகள், நிகழ்வுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட கேள்விகள்.
- மாணவர்கள் ஒரு குழுவாக அல்லது தனி நபராக திரைப்படத்தைச் சுற்றி ஒரு செயல்பாடு செய்யலாம்.
    1. படத்தில் இருந்து ஒரு காட்சியை உருவாக்குதல்
    2. படத்தில் நடிக்கும் நடிகர்களைப் போலவே நடிப்பது
    3. கதாபாத்திரங்கள் தமிழில் பேசக்கூடியது போல் உருவாக்குதல்
    4. சில குறிப்பிட்ட காட்சிகளைப் பற்றி விவாதித்தல்
    5. இத்திரைப்படத்திற்கு வித்தியாசமான கதையை எழுத முடியுமா? அது வேறு ஒரு தொடக்கத்தையும் வேறு முடிவையும் கொண்டிருக்கும்.
    6. இத்திரைப்படத்தை ஒரு நாடகமாக உருவாக்க முடியுமா? ஆம் எனில், குழுக்களாக உருவாக்க அவர்களை ஊக்குவிக்கவும்.
    7. பள்ளி, வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடைபெற வேண்டிய விவரங்கள் இணைப்பு 3–இல் கொடுக்கப்பட்டுள்ளது.

<u>**பள்ளி / வட்டார / மாவட்ட அளவிலான போட்டிகள்:**</u>

- மேலே குறிப்பிடப்பட்ட செயல்பாடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் சிறப்பாக செயல்படும் 1 மாணவன் மற்றும் 1 மாணவியைத் தேர்ந்தெடுத்து, வட்டார அளவில் நடைபெறும் போட்டியில் பங்கேற்கச் செய்ய வேண்டும். வட்டார அளவிலான போட்டிகளிலிருந்து 2 மாணவன் மற்றும் 2 மாணவிகளை மாவட்ட அளவிலான போட்டியில் பங்கேற்கச் செய்ய வேண்டும்.

மாவட்ட அளவிலான போட்டிகளில் இருந்து தலா 1 மாணவன் / மாணவி தேர்ந்தெடுக்கப்படுவர்.

- இவ்வாறு, மாவட்ட அளவில் ஜனவரி மாதம் தேர்ந்தெடுக்கப்பட்ட 76 மாணவ / மாணவியரும் பிப்ரவரி மாதம் தேர்ந்தெடுக்கப்பட்ட 76 மாணவ / மாணவியரும் என மொத்தம் 152 மாணவ / மாணவியர் கலந்து கொள்ளும் சிறப்பு சிறார் திரைப்பட விழா மற்றும் பயிற்சி முகாம் பிப்ரவரி 27 முதல் மார்ச் 3 வரை நடைபெறும்.

எனவே, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து நடுநிலைப் / உயர்நிலைப் / மேல்நிலைப் பள்ளிகளிலும் சிறார் திரைப்படங்கள் திரையிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:** இணைப்புகள் 1, 2 மற்றும் 3.

11/01/23

பள்ளிக் கல்வி ஆணையருக்காக

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள். -(மின்னஞ்சல் வழியாக)

**நகல்**

1. அரசு முதன்மைச் செயலாளர்,
   பள்ளிக்கல்வித்துறை, தலைமைச் செயலகம்,
   சென்னை - 9.
2. மாநிலத் திட்ட இயக்குநர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை-6.

## இணைப்பு–1

### 'மார்டன் டைமஸ்' திரைப்படத்தின் சுருக்கம்

சார்லி சாப்ளின் நடித்து இயக்கிய திரைப்படம். உலகம் முன்னைப் போல் இல்லை. அது வேகமாக மாறிக் கொண்டிருக்கிறது. புதிய புதிய எந்திரங்கள், புதிய புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் வந்துவிட்டன. இவற்றையெல்லாம் மனிதர்கள் எபப்டி பயன்படுத்துகிறார்கள்? அது யாருக்கு பயன் அளிக்கிறது?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடையாக தனக்கே உரிய பாணியில் நகைச்சுவையுடன் சொல்கிறது மாடர்ன் டைம்ஸ் வெளிவந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டலும், இன்றைக்கும் இதன் கதை பொருத்தமாகவே இருக்கிறது. இது வெளிவந்த காலக்கட்டத்தில் உலகையே கலக்கியது. திரைப்படம் பார்த்து முடித்தபின் மாணவர்களுடன் படம் குறித்து வாதிக்கலாம். ஓவியம் வரையச் சொல்லலாம், பிடித்த கதாபாத்திரங்கள் போல நடிக்கச் சொல்லலாம்.

11/01/23

பள்ளிக் கல்வி ஆணையருக்காக